<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS 52/2020**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 23.09.2025

Pw1 (துளசிமணி )

**குறுக்கு விசாரணை (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)**

தாவா சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான்என் தகப்பனார் எனக்கு ஒரு தான ஆவணம் 1ம் பிரதிவாதிக்கு ஒரு தான ஆவணம் தனித்தனியாக எழுதி வைத்தார் என்றால் ஆமாம். நானும் என் சகோதரியும் ஒன்றாக இல்லை என்பதால் என் தகப்பனார் தனித்தனியாக எழுதினார் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என் தகப்பனார் எழுதிய செட்டில்மெணட் படியும் என் சகோதரிக்கு ஏற்படுத்தியது செட்டில்மெண்ட் படியும் தான் பாத்தியம் என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு பாகம் உள்ளது. எனக்கு வந்த பாகம் செட்டில்மெண்ட் படியும் என் சகோதரிக்கு செட்டில்மெண்ட் படி பொதுவில் வந்தது என்றால் சரி. எனக்கு செட்டில்மெண்ட் படி பாத்தியப்பட்ட சொத்தில் வேறு யாருக்கும் பாகம் இல்லை என்றால் சரி. என் சகோதரிக்கு செட்டில்மெண்ட் படி வந்த சொத்தில் வேறு யாருக்கும் பங்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமை சட்டப்படி எனக்கு சொத்தில் பாகம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஒரு கிணறு உள்ளது. கிணற்றை நானும் 1ம் பிரதிவாதியும் பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரி. இந்த சொத்தும் வேறு சில சொத்துக்களும் பாகப்பிரிவினை ஆகாமல் இருந்ததை நானும் என் சகோதரியும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. 31.01.2013 ல் நானும் என் சகோதரியும் வேறு சில பாகஸ்தர்களுடன் சேர்ந்து ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைக்குமுன்பாக நானும் என் சகோதரி மற்றும் இதர பாகஸ்தர்கள் வசதிக்கேற்ப சொத்துக்களை அனுபவித்து வந்தோம் என்றால் சரி.

தாவா சொத்தை பாகம் பிரிக்க வேண்டும என்று என் சகோதரி சுந்திராம்பாளை வழகககு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். பொதுவாக சொத்து உள்ளதால் பிரிக்க வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் வடபுறம் ரோடு உள்ளது என்றால சரிதான். ரோட்டை ஒட்டி தென்வடல் நீலியாக சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் கிழபுறம் உள்ள சொத்தையும் 2ம் பிரதிவாதி மேபுறம் உள்ள சொத்தை தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல, பொதுவில் தான் ஓட்டி வருகிறோம். தென்வடல் நீலியாக கிழக்கோட்டில் நான் தென்னை மரங்கள் வைத்துள்ளேன் என்றால் சரிதான். சிறிது தூரம் தள்ளி கிழமேலாகவும் நான் தென்னைமரங்கள் வைத்துள்ளேன் என்றால் சரிதான். மேல்புறம் உள்ள பங்கில் முழுவதும் தென்னை மரங்கள் மற்றும் வாழை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் நான் கிழபுறம் உள்ள சொத்தையும் 2ம் பிரதிவாதி மேஹறபம் உள்ள சொத்தையும் பிரிவினை ஆகாமல் வசதிக்கேற்ப அனுபவித்து வருவதாகவும் அதை பிரித்துக கொடுக்க வழக்கு தாக்கல் செய்து விட்டு தற்போது முழு சொத்தையும் அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேல்புறத்தில் உள்ள வாழை மரம் மற்றும் தென்னை மரம் சுந்திராம்பாள் வைத்தது என்றால் சரியல்ல, நாங்கள் தான் வைத்தோம். நான் தான் வைத்ததாக வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தென்னம்பிள்ளை காயக்கவில்லை என்றால் சரிதான்.அது சிறிய பிள்ளையாக உள்ளது. 1ம் பிரதிவாதியிடமிருந்து 2ம்பிரதிவாதி கிரயம் பெற்ற பின் தென்னங்கன்றுகளை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. சுந்திராம்பாள் பாகத்தை பிரித்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் உள்ளது. சுந்திராம்பாள் கிரயத்திற்கு முன்பு நானும் என் சகோதரியும் வசதிக்கேற்ப பிரித்து அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். சுந்திராம்பாளுக்கு விற்பதற்கு முன்பு என் சகோதரிக்கு பாகம் இருந்தது. என் சகோதரி சுந்திராம்பாளுக்கு விற்பனை செய்தது தான் வழக்கிற்கு காரணம் என்றால் சரிதான். தாவாவிற்கு முன்பாக என் சகோதரிக்கு உன் பாகத்தை விற்பனை செய்யவேண்டாம் நானே வாங்கிக் கொள்கிறேன் என அறிவிப்போ சட்ட நடவடிக்கையோ எடுக்கவில்லை என்றால் சரிதான். சுந்திராம்பாள் கிரயம் பெற்ற

பின் மன வருத்தம் கொண்டு நான் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்து எனக்கு வேண்டும் என்று தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் சகோதரி 2ம் பிரதிவாதிக்கு ரகசியமாக விற்பனை செய்ய முயற்சித்ததாக சொல்லியுள்ளேன், அது எப்போது, என்ன ஆண்டு என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் 27.02.2008ல் அவ்வாறு தெரிய வந்தது. அந்த கால கட்டத்தில் நான் 1 ம் பிரதிவாதிக்கு எவ்வித அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கிரயத்திற்கு பின்னிட்டு நான் என் சகோதரிக்கு விற்பனை செய்தது தவறு என அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நான் எப்போது ஆவணங்களின் நகல் எடுத்துப் பார்த்தேன் என்றால் கிரயத்திற்கு பின்னிட்டு ஒரு ஆண்டு கழித்து தெரிந்து கொண்டேன். நகல் எடுத்து நான் தெரிந்து கொண்ட மாதம், வருடம் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் சகோதரி கிரயம் கொடுத்த மாதம் தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் என் சகோதரியிடம் நேரடியாக சொத்தை விற்பனை செய்ய வேண்டாம், பணம் கொடுத்து விடுவதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. என் சகோதரி 4,50,000/-க்கு விற்பனை செய்துள்ளார். அவ்வாறு விற்பனை செய்த காலத்தில் என்னிடம் அந்த தொகை இருந்ததா என்றால் இருந்தது. அந்த தொகை இருந்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் என் வங்கி கணக்கில் இருந்தது. அடுத்த விசாரணை தேதியில் மேற்படி வங்கி கணக்கில் எனக்கு தொகை இருந்ததை என்னால் காட்ட முடியுமா என்றால் காட்ட முடியும். நான் சொத்தை கிரயம் வாங்குவதற்கான முன் உரிமை வழக்கு கிரயம் ஆன தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்று நான் தாக்கல் செய்த இந்த வழககு கால வரையறை தோஷத்தால் பாத்திக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிரயம் குறித்து எந்த மாதம் வருடம் தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ள விவரம் தவறானது என்றால் சரியல்ல. மேல்புறத்தில் எத்தனை தென்னை மரங்கள், எத்தனை வாழை மரங்கள் உள்ளது என்று என்னால் எண்ணிக்கையில் சொல்ல முடியாது. என் சகோதரி கிரயம் கொடுத்தபின் முழு சொத்தும் என் சுவாதீனத்தில் வந்தது என்றால் நான் முழு சொத்தையும் கேட்கவில்லை. முழு சொத்தையும் நான் தான் சுவாதீனம் செய்து வருவதாக சொல்வது தவறு என்றும், நான் கிழபுறம் உள்ள சொத்தை தான் அனுபவித்து

வந்தேன் என்றும் மேபுறம் உள்ள சொத்தை என் சகோதரி அனுபவித்து வந்த அவர் விற்பனை செய்துள்ளார் என்றும் கிரயம் பெற்றவர் தான் மேபுற சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஒட்டி மேல்புறம் சுந்திராம்பாளுக்கு தனித்து பாத்தியப்பட்ட 3-1/2 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரி. தாவா சொத்தின் தரம் ஒரே மாதிரி தான் உள்ளது என்றால் சரி. சுந்திராமபாள் மேபுறம் அனுபவித்து வந்த சொத்தை 2ம் பிரதிவாதி கிரயம் பெற்ற நிலையில் அவருக்கு அந்த பாகம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கிழபுறம் உள்ள பாகம் தான் எனக்கு ஒதுக்கப்பட வேண்டியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு அவருக்கு மேபுற பாகம் ஒதுக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.09.23 16:18:52 +0800

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS